பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 16 செவ்வாய்க்கிழமை 29.03.2022 கதிர் 13

### உரிய அனுமதியின்றி

# தென்னை மரம் வெட்டத் தடை!



உரிய அனுமதியின்றி தென்னை மரம் வெட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

2

# சூழ்ச்சிக்காரர்கள் வெளியேற்றம்; இந்த அரசைக் கவிழ்க்க முடியாது!

### 'மொட்டு' கட்சி திட்டவட்டம்



சூழ்ச்சிக்காரர்கள்அரசிலிருந்துவெளியேறிவிட்டனர். எனவே, அரசின் இருப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இந்த அரசை எவராலும் கவிழ்க்கவே முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

2

# இலங்கை, இந்திய மீனவர்கள் கைது



கைதான இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களின் படகு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.29

இலங்கை, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய குற்றத்தில் மற்றைய

2

# தேசிய அரசும் இல்லை; புதிய பிரதமரும் இல்லை

### வதந்திகளை நம்பாதீர்கள் என கோட்டா வேண்டுகோள்



**எமது அரசு தொடர்ந்தும் பயணிக்கும். தேசிய அரசு அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பிரதமரை மாற்றும் யோசனையும் எமக்கு இல்லை. சிலரால் திட்டமிட்டு வெளியிடப்படும் வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம்.**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

2

### மோடியை நேரில் சந்தித்துப் பேச

# தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் ஓகஸ்ட் மாதம் டில்லி பயணம்?

தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இந்தியா செல்லக்கூடும் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தியாவின் தலையீட்டைக் கோரி தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிமொன்றை அனுப்பி இருந்தன.

2



# நானே பிரதமர்

### தேசிய அரசு குறித்த தகவல் வதந்தி என்கிறார் மஹிந்த

தேசிய அரசு தொடர்பில் வெளியாகும் ஊகங்கள் அனைத்தும் வதந்தி. பிரதமர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் எனக்கு இல்லை. பதவிக் காலம் முடியும் வரை பிரதமர் பதவியில் நீடிப்பேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு தேசிய அரசு நிறுவப்படும் எனவும், அந்த அரசின் பிரதமர் பதவி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படும் எனவும் பரவலாகத்

2





# அரசை விரட்டியடித்துவிட்டு புதிய ஆட்சியை நிறுவுவோம்

### கம்மன்பில சூளுரை

வேலை செய்ய முடியாத இந்த அரசை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மக்களுக்காகப் பணியாற்றக்கூடிய அரசொன்றை மக்களே உருவாக்கிக்கொள்ள சந்தர்ப்பத்தை மீண்டும் ஏற்படுத்திக்கொடுப்போம்.

2

# கரவெட்டி தவிசாளர் கொழும்பில் கைது!

காசோலை மோசடிக் குற்றச்சாட்டில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட கரவெட்டிப் பிரதேச சபையின் தவிசாளர் வே.ஐங்கரன் கொழும்பில் சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வெளிநாடுகளுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்ற தனியார் நிறுவனத்தையும்

2



# பிரதமர் பதவியை நான் கோரவில்லை

### தேசிய வேலைத்திட்டமே வேண்டும் என்கிறார் ரணில்

பிரதமர் பதவியை வழங்குமாறு இந்த அரசிடம் நான் கோரிக்கை விடுக்கவில்லை. தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறே வலியுறுத்தியுள்ளேன்.

2

## நானே .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ,

நாட்டில் பிரச்சினைகள் இருந்தபோதிலும், அவற்றை விரைவில் தீர்க்க அரசு செயற்பட்டு வருகின்றது. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

எனது பதவிக்காலம் முடியும் வரை நான் நாட்டின் பிரதமராக நீடிப்பேன். அடுத்த தேர்தலுக்குப் பிறகும் நாங்கள் வெற்றி பெறுவோம்.

## தமிழ்க் கட்சிகளின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கடிதம் உட்பட அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடவே தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் புதுடில்லி செல்லவுள்ளனர்.

இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வருகின்றது.

புதுடில்லி செல்லும் திட்டம் இரு தடவைகள் பிற்போடப்பட்டன. எனினும், ஆகஸ்ட் மாதளவில் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கான சாத்தியம் அதிகம் எனவும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

## அரசை விரட்டியடித்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

அத்தியாவசியப் பொருள்களான எரிபொருள், மருந்துப்பொருள்கள், உணவுப் பொருள்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்த தட்டுப்பாடு உருவாக்கப்பட்டதொன்று.

கடந்த காலங்களில் நாட்டுக்கு எதிரான பல காட்டிக்கொடுப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்தஒப்பந்தங்கள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கு நாட்டு மக்களுக்கு நேரமில்லை.

பால்மாவுக்காகவும், சமையல் எரிவாயுவுக்காகவும், எரிபொருள்களுக்காகவும் வரிசையில் நின்றுவிட்டு, வீட்டுக்குச் செல்லும்போது வீட்டில் மின்சாரம் இருக்காது. இதனால், அரசின் சரி, தவறுகளைக் கண்டறிய மக்களால் முடியவில்லை.

தற்போதைய அரசு பொறுப்பேற்கும்போது டொலரின் பெறுமதி 190 ரூபாவாக இருந்தது. எனினும், தற்போது 300 ரூபாவை நெருங்கியுள்ளது. இதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் - என்றார்.

## பிரதமர் பதவியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு எனக்கு எவரும் அழைப்பு விடுக்கவில்லை. நானும் அப்பதவியை கேட்கவில்லை. தற்போதைய சூழ்நிலையில் தேசிய வேலைத்திட்டமொன்றே அவசியம். அதன்மூலம் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும்.

இனவாதம்பேசும் அரசியல் இனியும் வேண்டாம். அந்த அரசியல் கலாசாரம் மாற வேண்டும். - என்றார்.

## கரவெட்டி தவிசாளர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கி வருகின்றார். அந்த நிறுவனத்தின் ஊடாக இடம்பெற்ற காசோலை கொடுங்கல் வாங்கல்களில் முறைகேடுகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வழங்கிய காசோலைகள், அவரது வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்பதால் திரும்பியுள்ளன. இதையடுத்தே தவிசாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எனக்கு இன்னும் சிறிது காலம் இருக்கின்றது. உடனே ஓய்வுபெற மாட்டேன். தேசிய அரசு தொடர்பில் வெளியாகும் ஊகங்கள் அனைத்தும் வதந்தி.

தற்போதைய நெருக்கடிகளான பொருளாதாரம், மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் அனைத்தையும் அரசு விரைவில் தீர்க்கும் -என்றார்.

## தேசிய அரசும் இல்லை; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசால் - தேசிய அரசால்தான் நாடு இந்தளவு நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இந்நிலையில், மீண்டுமொரு தேசிய அரசு எதற்கு?

எமது அரசு பெரும்பான்மைப் பலத்துடன் இன்னமும் இருக்கின்றது. அரசைக் கவிழ்க்கச் சதி செய்வோர் தொடர்பில் நாம் கவனம் எடுத்துள்ளோம். அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை விரைவில் முடிவுக்கு வரும் - என்றார்.

## சூழ்ச்சிக்காரர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் நாடாளுமன்ற அணி பலமாகவே உள்ளது. எமது பக்கம் உள்ளவர்கள் மீது எமக்குப் பூரண நம்பிக்கை உள்ளது. அரசின் திட்டங்களை அவர்களும் நம்புகின்றனர். எனவே, பலமான அரசாக இந்தப் பொருளாதாரச் சவாலை வெற்றிகொள்வோம். அடுத்த தேர்தலில் வெற்றி நடையும் போடுவோம்.

சூழ்ச்சிக்காரர்கள் வெளியேறிவிட்டனர். அங்கும், இங்கும் சென்று ஒப்பாரி வைக்கின்றனர். முடிந்தால் 113 என்ற சாதாரணப் பெரும்பான்மையை இல்லாதுசெய்யுமாறு சவால்விடுக்கின்றோம். அது அவர்களால் முடியாது. நாம் கெஞ்சப்போவதும் இல்லை. பலம் பொருந்திய தலைவரான பஸில் ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கே முற்படுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் - என்றனர்.

## தென்னை மரம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

சிலோன் ரீ நாமம்போல, சிலோன் கொக்கனட்டுக்கும் (தேங்காய்) சர்வதேச சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இது எமது பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக அமையும். தேயிலை தொழில் துறைக்கு நிகரான வருமானத்தை இதன்மூலமும் ஈட்ட முடியும்.

மரம் வெட்டுதல் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்குள் தென்னை மரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

எனவே, இனி கிராம சேவகர், பிரதேச செயலாளரின் அனுமதியின்றி தென்னை மரம் வெட்ட முடியாது. வெட்டினால் பொலிஸாரால் கைதுசெய்ய முடியும் - என்றார்.

## இலங்கை, இந்திய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்புக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 366 இலக்க படகில் புறப்பட்ட 4 தமிழக மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இதேநேரம் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடியில் இருந்து பயணித்த மீனவ படகு ஒன்று இந்தியாவின் காரைக்கால் பகுதிக்குள் நுழைந்ததாக கைது செய்யப்பட்டுள்ளது.












# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசின் பம்மாத்து படம்

**நாடு எதிர்கொண்டிருக்கும் மோசமான நெருக்குவாரத்திலிருந்து மீளுவதற்கான முயற்சியாக ஆட்சியாளர்கள் தேசிய அரசு என்ற தந்திரோபாயத்தை நாடுவார்கள் என சில தரப்பினால் வெளிப்படுத்தப்பட்ட ஊகம் நடைமுறைக்கு வராது என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது**

**எமது அரசு தொடர்ந்தும் பயணிக்கும். தேசிய அரசு அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பிரதமரை மாற்றும் யோசனையும் எமக்கு இல்லை. சிலரால் திட்டமிட்டு வெளியிடப்படும் வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம். – என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சில ஆளும் தரப்பு அரசியல் தலைவர்களும் இதனைத் தெளிவுபடுத்தி விட்டனர்.**

**இந்தக் கருத்தை வெளியிட்ட ஜனாதிபதியும் பிரதமரும் இன்னொரு தகவலையும் வெளியிட்டு இருக்கின்றனர். அது – நாடு எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடியில் இருந்து அது விரைவில் வெளியே வரும், பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்படும் என்பதாகும்.**

**நல்லது. அந்த உறுதிமொழியைக் கேட்க இனிப்பாக இருக்கின்றது. ஆனால் எப்படி நெருக்கடிகள் முடிவுக்கு வரும், பிரச்சினைகள் தீர்வு காணப்படும் என்பதை இருவருமே விவரிக்கவே இல்லை. மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் பேச்சாகத்தான் அவர்களின் இந்த கதையை நாம் நோக்க வேண்டி இருக்கின்றது. ஜனாதிபதி, பிரதமர் இருவருமே வெறுங்கையால் முழம் போடும் வாய்ப்பந்தல் பேச்சைத்தான் கூறுகின்றார்கள்.**

**இந்தியாவிடமும் சீனாவிடமும் மேலும் மேலும் கடன் பெற்று இந்த பிரச்சினையில் இருந்து நாடு மீள முடியும் என்று ராஜபக்ஷக்கள் நம்புகின்றார்களா?**

**சேற்றுக்குழியினுள் விழுந்தவன் சேற்றிலிருந்து வெளியே வருவதற்கு வெளியில் இருந்து ஒரு பிடிமானத்தைக் கைப்பற்ற வேண்டும். மேலும் மேலும் சேற்றை அழுந்தி மேலெழ முயன்றால் சேற்றுக்குள் மேலும் மேலும் புதைய வேண்டித்தான் நேரும்.**

**சர்வதேசத்திடம் கடன் வாங்கிக் குவித்து, அதனால் நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் நாடு, மேலும் மேலும் கடன் வாங்குவது என்பது சேற்றுக் குழிக்குள் வீழ்ந்து மூழ்கிக் கொண்டிருப்பவன் அதே சேற்றை மேலும் மேலும் அழுத்தி மேலெழும் முயற்சியில் அதற்கு உள்ளேயே மூழ்குவதற்கு ஒப்பாகும்.**

**கடன் இல்லாத பாரிய உதவித் திட்டம், வர்த்தக விருத்தி, சுய உற்பத்திப் பெருக்கம், வெளிநாட்டு செலாவணி கையிருப்பை உயர்த்துவதற்கான மேம்பாட்டு திட்டங்கள் என்று ஏதேனும் பயனுள்ள பொருளாதாரத் தந்திரோபாயங்கள், அபிவிருத்திக்கான சாணக்கிய நடவடிக்கைகள் போன்றவை அவசியம்.**

**அவை எவையும் இந்த ஆட்சி பீடத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தேவையை – நெருக்கடியை – கடப்பாடுகளை – சமாளிப்பதற்காக புதிது புதிதாக பணநோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளுவதும், வெளிநாட்டிடம் மேலும் மேலும் கடன்களை வாங்கிக் குவிப்பதும், பொருளாதார நெருக்குவாரங்களில் இருந்து தற்காலிகமாக மூச்சு விட வழி செய்யுமே தவிர, மாறாக மேம்பட வழி செய்யாது. அத்துடன் பொருளாதார பின்னடைவு நிலையை இத்தகைய தூரப்பார்வையற்ற குறுகிய அணுகுமுறைகள் மேலும் மோசமாக்கும்.**

**பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் தந்திரோபாயமோ, செயற்றிட்டமோ, உத்தியோ, திராணியோ இல்லாத ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் விரைவில் மீட்சி என்று பம்மாத்துப் படம் காட்டுகின்றது. அதைப் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கி மடிய வேண்டியதுதான்.**



## புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திட்டங்களுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதி

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் மூலம் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

ஜூலி சங்கிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்று (திங்கட்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பை தூதுவர் பாராட்டினார்.

அண்மைக்காலமாக இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களை விளக்கிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் விடயத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை பாராட்டிய ஜூலி சங், இது நீண்டகால அடிப்படையில் இந்நாட்டுக்கு முக்கியமானதொன்றாகும் எனவும் சுட்டிக்காட்டினார். எந்தவித பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், குறைந்த வருமானம் பெறுவோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் மாற்றம் வரும்!

### ருவான் விஜேவர்தன ஆரூடம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை கட்டியெழுப்ப கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க எனவும் அவரிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாடு சமூகத்திற்குள் ஏற்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த காரணத்தின் அடிப்படையிலேயே தேசிய அரசாங்கம், கூட்டு அரசாங்கம் அமைக்கப்படவுள்ளதாகவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார் எனவும் வதந்திகள் பரவி வருகின்றன.

எவ்வாறாயினும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் நாடாளுமன்றத்தில் பெரிய மாற்றம் ஏற்படும் என்பது தனது நம்பிக்கை எனவும் ருவான் விஜேவர்தன கூறியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## பேராதனை போதனா வைத்தியசாலையில் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு!

### இந்திய வெளிவிவகார அமைச்சர் கவலை

பேராதனை போதனா வைத்தியசாலையில் மருந்துப்பொருள்கள் தட்டுப்பாடுகள் தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கவலை தெரிவித்துள்ளார்.

மருந்துப்பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தச் செய்தி தொடர்பாகக் கவலையடைகிறேன் எனவும், இந்த விடயத்தில் இந்தியா எவ்வாறு உதவமுடியும் என்பது பற்றி இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுமாறு உயர்தானிகர் கோபால் பாக்லேவிடம் அறிவுறுத்தவிருக்கிறேன் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இந்திய உயர் தூதரகம் பேராதனை பல்கலைக்கழகத்தின் அறுவைச் சிகிச்சை பேராசிரியர் எம்.டி.லமவன்சவை தொடர்பு கொண்டு வழக்கமான மற்றும் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகளைத் தொடரத் தேவையான மருத்துவ பொருள்களை அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## மருந்துப் பொருள்களின் தட்டுப்பாட்டால் பேராதனை போதனா சத்திரசிகிச்சை நிறுத்தம்

*மருந்துப்பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.*

*அதற்கமைய அவசர சிகிச்சைகள் மாத்திரமே நடைபெறவுள்ளன.*

*இதனை வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர் எச்.எம் அர்ஜுன திலக்கரத்ன தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, நாட்டில் மருத்துவ உபகரணங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டை இரண்டாக உடைக்கும் முயற்சி கிழக்கு உக்ரைன் மீது ரஷ்யா கவனம்




## இரு நாட்டு அதிபர்கள் பேச்சு சாத்தியமா?

உக்ரைனின் கடுமையான எதிர்த் தாக்குதலால், அந்நாட்டை இரண்டாக உடைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இதற்காக கிழக்கு உக்ரைனை முழுமையாக கைப்பற்ற ரஷ்ய ராணுவம் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதை விரும்பாத ரஷ்யா, கடந்த மாதம் 24ம் திகதி அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. 33 நாள்களாக போர் தொடர்ந்து நடந்து வருகிறது. கெர்சன் நகரை ரஷ்யா கைப்பற்றிய நிலையில், மரியுபோல் உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களை நாசம் செய்துள்ளது. கார்கிவ், லிவிவ் நகரங்களில் தொடர்ந்து போர் நடக்கும் நிலையில், உக்ரைன் ராணுவம் சரணடையாமல் கடுமையான பதில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக தலைநகர் கீவ், கார்கிவ் போன்ற முக்கிய நகரங்களை கைப்பற்றும் ரஷ்யாவின் முயற்சி தோல்வி அடைந்துள்ளது.

இதை உணர்ந்து கொண்ட ரஷ்யா, வடகொரியா, தென் கொரியா போல உக்ரைனை இரண்டாக உடைக்க திட்டமிட்டிருப்பதாக உக்ரைன் உளவுத்துறை தளபதி நேற்று முன்தினம் தெரிவித்தார். அதாவது மேற்கு உக்ரைன், கிழக்கு உக்ரைனை தனித்தனியாக உடைப்பதே ரஷ்யாவின் தற்போதைய திட்டம். கிழக்கு உக்ரைனில் ஏற்கனவே டான்பாஸ் பிராந்தியத்தின் டோனெட்ஸ்க், லூஹான்ஸ்க் ஆகிய நகரங்களை கிளர்ச்சிப்படை மூலம் ரஷ்யா வசம் உள்ளது. எனவே கிழக்கு உக்ரைனை முழுமையாக கைப்பற்ற அப்பகுதியில் தற்போது ரஷ்ய படைகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அதேசமயம், கார்கிவ், கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது வான்வழி தாக்குதலை ரஷ்ய ராணுவம் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே, துருக்கியின் இஸ்தான்புல்லில் ரஷ்யா, உக்ரைன் நாட்டு பிரதிநிதிகள் போர் நிறுத்த பேச்சுவ நடத்த நேற்று திட்டமிட்டிருந்தனர். கடைசி நேரத்தில் அந்த பேச்சு ஒத்திவைக்கப்பட்டது. ஆனாலும், இப்பேச்சு இந்த வாரத்தில் நிச்சயம் நடக்கும் என உக்ரைன் உறுதி செய்துள்ளது. பேச்சில் ரஷ்ய அதிபர் புடின் - உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி இருவரும் நேரடியாக ஆலோசிப்பது தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. ஆனால் புடின்-ஜெலன்ஸ்கி பேச்சுக்கு ரஷ்யா இப்போதைக்கு தயாராக இல்லை. முக்கியமான சில விடயங்களுக்கு உக்ரைன் உடன்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார். இதனால் இப் பேச்சு உக்ரைன் விவகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

### ரஷ்ய பீரங்கி அணிவகுப்பை தகர்த்த உக்ரைன் டிரோன்கள்

உக்ரைன் தலைநகர் கீவ்வை கைப்பற்ற, அந்நகரை நோக்கி சுமார் 60 கி.மீ. தூரத்திற்கு ரஷ்ய பீரங்கிகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. இந்நிலையில், உக்ரைன் ராணுவத்தின் சிறப்பு பயிற்சி பெற்ற 30 வீரர்களைக் கொண்ட டிரோன் படை, ரஷ்ய பீரங்கி அணிவகுப்பை தாக்கி தகர்த்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இரவில் ஏவப்பட்ட டிரோன்கள் மூலம் ரஷ்ய பீரங்கிகள் பல அழிக்கப்பட்டுள்ளன என உக்ரைன் கூறி உள்ளது.

### இந்திய மாணவர்களுக்கு ரஷ்ய பல்கலை அழைப்பு

உக்ரைனில் மருத்துவம் படித்து போரினால் தாய்நாடு திரும்பியுள்ள இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாட்டு மாணவர்கள் தங்கள் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரலாம் என ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. மாணவர்கள் நடப்பாண்டிற்கான கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும் தனி நுழைவுத்தேர்வுகள் தேவையில்லை என்றும் ரஷ்ய பல்கலைகழகங்கள் உறுதியளித்துள்ளன. உக்ரைனில் இருந்து இந்தியாவுக்கு சுமார் 16 ஆயிரம் மாணவர்கள் திரும்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஒஸ்கார் விருது விழாவில் உக்ரைனுக்கு ஆதரவு

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்சலஸ் நகரில் ஒஸ்கார் - 2022 விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் பாரம்பரியமிக்க சிவப்பு கம்பள வரவேற்பில் பங்கேற்ற கலைஞர்களில் பெரும்பாலானோர் உக்ரைன் நாட்டு கொடியை தங்களது அங்கியில் இடபெற செய்திருந்தனர். சிலர் உக்ரைனிலிருந்து அண்டை நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு ஆதரவாக நீல நிறத்திலான ரிப்பனை அணிந்து வந்திருந்தனர். மேலும், விழா அரங்கின் பிரமாண்ட திரையில் உக்ரைனுக்கு ஆதரவான செய்தி இடம்பெற்றது. அதில், 'உக்ரைனை உங்களால் முடிந்த விதத்தில் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உக்ரைனில் உள்ள மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கு உணவு, மருத்துவம், சுத்தமான தண்ணீர் மற்றும் அவசர சேவைகள் தேவை. நாம் கூட்டாக, உலக ளாவிய சமூகமாக முடிந்த உதவிகளை செய்வோம்' என கூறப்பட்டது.

# உக்ரைனிலிருந்து நாடு திரும்பிய இந்திய மாணவர்கள் ரஷ்ய பல்கலைக்கழகங்களுக்கு அழைப்பு விடுப்பு

## நுழைவுத் தேர்வு தேவையில்லை




உக்ரைனில் இருந்து நாடு திரும்பிய இந்திய மாணவர்களை கூடுதல் கட்டணமின்றிதங்கள்நாட்டுபல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ள ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது. உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தொடுத்து வரும் போர் முடிவில்லாமல் நீண்டு கொண்டே இருக்கிறது. ரஷ்ய படைகளின் உக்கிரமான தாக்குதல்களில் உக்ரைன் நகரங்கள் அனைத்தும் உருக்குலைந்து வருகின்றன. உக்ரைன் மீதான போரின் முதற்கட்ட இலக்கை எட்டிவிட்டதாகவும், இனி உக்ரைனின் கிழக்கு பகுதிகளை பாதுகாப்பதில் கவனம்செலுத்தபோவதாகவும் ரஷ்யா கூறினாலும் இன்னும் அதை செயல்படுத்தவில்லை. மாறாக உக்ரைன் நகரங்களை சுடுகாடுகளாக மாற்றும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

லட்சக்கணக்கான உக்ரைன் மக்கள் உயிர் பிழைப்பதற்காக அகதிகளாக அண்டை நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர். இதேபோன்று உக்ரைனின் உயர்கல்வி நிறுவனங்களில் பயின்று வந்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்களும் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பிவிட்டனர். உக்ரைனில் மருத்துவம், பொறியியல் போன்ற உயர்படிப்பு பயின்று வந்த சுமார் 20,000 இந்திய மாணவர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டனர். இதில் பெரும்பாலானோர் மருத்துவ மாணவர்கள் ஆவர். உக்ரைனில் போர் இன்னும் முடிவுக்கு வராததால், நாடு திரும்பிய மாணவர்களின் கல்வி கேள்விக் குறியாகி உள்ளது. எனவே அவர்கள் படிப்பை தொடர்வதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசும் ஆலோசித்து வருகிறது.

இதனிடையே, போர் காரணமாக படிப்பை பாதியில் விட்டு நாடு திரும்பிய இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு மாணவர்களை தங்கள் நாட்டில் படிப்பை தொடர வைக்க ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்காக இந்திய மருத்துவ மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களை ரஷ்யா மற்றும் கிரீமியாவில் உள்ள ரஷ்ய பல்கலைக்கழகங்கள் அணுகியுள்ளன. கூடுதல் கட்டணம் மற்றும் நுழைவுத்தேர்வு இன்றி தங்கள் பல்கலைக்கழகங்களில் இந்த மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்போவதாக ரஷ்ய பல்கலைக்கழகங்கள் அறிவித்துள்ளன.

உயர்கல்வியை பாதியிலேயே விட்டு வெளியேறிய தங்களின் எதிர்காலம் பற்றி அச்சமடைந்து தவிக்கும் மாணவர்களுக்கு ரஷ்யாவின் இந்த அறிவிப்பு ஆறுதலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யா போன்றே ஏற்கனவே கஜகஸ்தான், ஜார்ஜியா, அர்மீனியா, பெலாரஸ், போலந்து போன்ற நாடுகளும் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளன.




# கன்னத்தில் அறைந்த நடிகரிடம் மன்னிப்புக் கோரினார் ஸ்மித்

ஒஸ்கார் விழா மேடையில் கன்னத்தில் அறைந்த காமடி நடிகர் கிறிஸ் ராக்கிடம் வில் ஸ்மித் மன்னிப்புக் கோரினார். காணாது தவறுக்கு நடிகர்கள் மற்றும் ஒஸ்கார் குழுவிடம் மன்னிப்பு கேட்ட நிலையில் கிறிஸ் ராக்கிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார்.

விழாவில் நான் நடந்து கொண்ட செயல் ஏற்க முடியாதது மட்டுமன்றி மன்னிக்க முடியாததும் கூட. என் மனைவியின் தலைமுடி சிகிச்சை குறித்து ஜோக்கை ஏற்றுக்கொள்ள முடியாதமையால் அறைந்துவிட்டேன் என வில் ஸ்மித் கூறியுள்ளார்.

# நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை 31 இல் விவாதத்துக்கு

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முறைப்படி தாக்கல் செய்யப்பட்டது. பிரேரணையின் மீதான விவாதம் வரும் 31ம் திகதி தொடங்குகிறது. பாகிஸ்தான் கடந்த சில வருடங்களாகவே கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. 'இம்ரான் கான் சரியாக அரசை வழிநடத்தவில்லை. அதனால் அவர் ராஜினாமா செய்ய வேண்டும்' என அவரது கட்சியினர் உட்பட பலரும் அவருக்கு எதிராக போர்க்கொடி தூக்கி வருகின்றனர். இந்த பரபரப்பான சூழ்நிலையில், இம்ரான்கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் முன்மொழிந்த தீர்மானத்திற்கு 161 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். வரும் 31ம் திகதி நம்பிக்கை இல்லா பிரேரணையின் மீது விவாதம் நடைபெறும் என்று உள்துறை அமைச்சர் ஷேக் ரஷீத் நிருபர்களிடம் தெரிவித்தார். நம்பிக்கை இல்லா பிரேரணையின் மீதான விவாதம் 3 முதல் 7 நாள்கள் வரை நடைபெறலாம் என்று கூறப்படுகிறது. மொத்தம் 342 உறுப்பினர்கள் உள்ள நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு 172 பேரின் ஆதரவு தேவை. இம்ரான்கான் கட்சியில் 155 உறுப்பினர்கள் உள்ளனர்.

அவர்களில் 24 பேர் இம்ரானுக்கு எதிராகவாக்களிக்கக்கூடும். கூட்டணி கட்சி எம்.பிக்களின் ஆதரவும் இம்ரானுக்கு உள்ளது.

காலைக்கதிர் Kalaikathir மாலைப்பதிப்பு



# டுபாயில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் 3,500 கோடி ரூபாவுக்கான ஒப்பந்தம்




தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அபுதாபியில் உள்ள முபாதாலா கோபுரத்தில் உள்ள எமிரேட்ஸ் மாளிகையில் முன்னணி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளைச் சந்தித்துள்ளார்.

அபுதாபியில் பங்கேற்ற நிகழ்வு ஒன்றில் KK குழுமத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான யூசுப் அலியையும் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது, முதலமைச்சர் முன்னிலையில் லுலு நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. KK நிறுவனம், 3,500 கோடி ரூபா முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற வகையில், 3 திட்டங்களை மேற்கொள்ள உள்ளது. அதில், 2,500 கோடி ரூபா முதலீடுகளில் 2 வணிக வளாகங்கள் மற்றும் 1,000 கோடி ரூபா முதலீட்டில் ஏற்றுமதி சார்ந்த உணவு பதப்படுத்தும் திட்டம் ஆகியவற்றை நிறுவிட KK நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளின்போது, தமிழ்நாட்டின் தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் வி. அருண் ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக் குநர் பூஜா குல்கர்ணி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளின் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வங்கிக் கடன்களை மீளச் செலுத்தாதோர் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்து கேள்வி



இந்திய நாடாளுமன்ற மக்களவையில் வங்கிகளின் கடனை திருப்பிச் செலுத்தாதவர்கள் மற்றும் அவர்களது செயல்படாத சொத்துகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து தி.மு.க.வின் எம்.பி. யான டி.ஆர். பாலு எழுப்பிய கேள்விக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் அளித்தார்.

அப்போது அவர், மோடி தலைமையிலான அரசு முதன்முறையாக வங்கிகளில் கடன் பெற்று திரும்ப செலுத்தாதவர்களிடம் இருந்து பணத்தை வசூலித்துள்ளது.

கடன் பெற்று ஏமாற்றியவர்கள் மீது எப்.ஐ.ஆர். பதிவு உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரும்ப வராத கடன்களை தள்ளுபடி செய்வது என்பது முழுமையான தள்ளுபடி என்று அர்த்தமல்ல. வங்கிகள் ஒவ்வொரு கடன்கள் மீதும் நிலுவைத் தொகையை வசூலித்து வருகின்றன.

பொதுத்துறை வங்கிகள் கடனை செலுத்தாதவர்களிடமிருந்து சொத்துக்களை கையகப்படுத்தி உள்ளன.

முந்தைய ஐக்கிய முற்போக்கு ஆட்சியின் போது அரசியல் காரணங்களுக்காக கடன்கள் வழங்கப்பட்டன. ஆனால், அந்த கடன்களை திரும்பி செலுத்தாதவர்களிடம் இருந்து எந்த பணமும் மீட்கப்படவில்லை. கசப்பான இந்த உண்மையை எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

செயலி அடிப்படையிலான நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளை இந்திய ரிசர்வ் வங்கியும் கண்காணித்து வருகிறது, என்று தெரிவித்திருக்கிறார்.

## மேற்கு வங்கத்தில் திரிணாமுல் – பா.ஜ.க. மோதல் ஐந்து எம்.எல்.ஏக்கள் சட்டசபையில் இடைநிறுத்தம்



பீர்பூம் கலவர விவகாரம் தொடர்பாக மேற்கு வங்க சட்டசபையில் நேற்று ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் இடையே மோதல் வெடித்தது.

மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமை மோசமடைந்து விட்டதாகவும், இது குறித்து முதல்வர் மம்தா பானர்ஜியின் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், சட்டசபையில் எதிர்க்கட்சியான பா.ஜ.க. கோரிக்கை விடுத்தது.

இதற்கு ஆளும் திரிணாமுல் எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் இரு தரப்பினரிடையேயும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு மோதலில் முடிந்தது. இந்த அமளி காரணமாக சட்டசபையில் கூச்சல் குழப்பம் நீடித்தது.

இதையடுத்து அவையில் அத்துமீறி நடந்து கொண்டதற்காக கூறி எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி உட்பட 5 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களை, சபாநாயகர் பிமன் பந்தோபாத்யா மறு அறிவிப்பு வரும் வரை இடைநிறுத்தி உத்தரவிட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சுவேந்து அதிகாரி தலைமையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் வெளியே செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து , சட்டசபையின் கடைசி நாள் கூட்டத்திலாவது மேற்கு வங்க மாநில சட்டம் , ஒழுங்கு குறித்து விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தனர் எனக் கூறினார். ஆனால், அரசு மறுத்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் எங்கள் எம்.எல்.ஏக்களுடன் மோதலில் ஈடுபட கொல்கத்தா காவல்துறையினரை சாதாரண உடையில் சபைக்கு ஆளும் கட்சியினர் வரவழைத்து இருந்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதை மறுத்துள்ள திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் அம்மாநில அமைச்சருமான பிர்ஹாத் ஹக்கீம், சட்டசபையில் குழப்பத்தை ஏற்படுத்த பா.ஜ.க. நாடகம் ஆடுகிறது என்றும், சபைக்குள் நடந்த கைகலப்பில் திரிணாமுல் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் சிலர் காயமடைந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் நாளை டெல்லிக்குப் பயணமாகிறார்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 4 நாள்கள் அரசு முறைப் பயணமாக கடந்த 24 ஆம் திகதி துபாய் புறப்பட்டு சென்றிருந்தார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர் அபுதாபிக்கும் சென்றார். நேற்று மாலை அபுதாபியில் அவருக்கு நடைபெறும் பாராட்டு விழாவில் பங்கேற்ற பின்னர், இன்று அதிகாலை சென்னை திரும் பியிருக்கிறார். இதையடுத்து அவர் 3 நாள்கள் பயணமாக நாளை இரவு டெல்லிக்கும் புறப்பட்டுச் செல்கிறார். சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி செல்லும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை மறுதினம் பிற்பகல் 1 மணியளவில் பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசவுள்ளார்.

அப்போது நீட் மசோதாவுக்கு விலக்கு அளிப்பது தொடர்பாகவும், தமிழக நலன் சார்ந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்க கோருவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அவர் மனு அளிக்கவுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

டெல்லியில் ஏப்ரல் 2 ஆம் திகதி புதிதாக திறக்கப்படும் அண்ணா கலைஞர் அறிவாலய திறப்பு விழாவில் பங்கேற்கவும் மோடிக்கு அழைப்பு விடுப்பதோடு, அதன் தொடர்ச்சியாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவையும் சந்தித்து பேசவிருக்கிறார்.

மத்திய அமைச்சர்களான ராஜ்நாத்சிங், நிதின்கட்காரி ஆகியோரையும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேச உள்ளளார் எனவும், மறுநாள் காங்கிரஸ் தலை வர்கள் சோனியா, ராகுல் காந்தி ஆகியோரை ஒரே இடத்தில் சந்தித்து பேசியபின், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசியத் தலைவர்களையும் சந்தித்து பேச திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. சனிக்கிழமை மாலை 5 மணிக்கு டெல்லியில் கட்டப்பட்டுள்ள அண்ணா கலைஞர் அறிவாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டு அண்ணா கலைஞர் அறிவாலயத்தை திறந்து வைத்தபின், அன்று இரவே மு.க.ஸ்டாலின் சென்னை திரும்புவார் என, தமிழக முதலமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கண்டனம்

பெற்றோல், டீசல் விலை அதிகரிப்புக்கு இந்திய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இரண்டுநாள் விடுமுறைக்குப் பிறகு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கூடியதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கங்கள் மூலம் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

மாநிலங்களவையில், பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு உருளைக்கிழங்கு விலை உயர்வு மற்றும் இன்று நடைபெறும் வேலைநிறுத்தம் ஆகியவை குறித்து உடனடியாக விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் அளித்த ஒத்திவைப்பு தீர்மானத்தை மாநிலங்கள வைத் தலைவர் வெங்கையா நாயுடு நிராகரித்தார். இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

இதற்கிடையே, வேறு பல விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்தவும் கோரிக்கை எழுந்தது. அவை அலுவல்களை நடத்த முடியாத அளவு எதிர்ப்பு அதிகரித்ததால், மாநிலங்களவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், நிதி மசோதா மற்றும் நிதிஒதுக்கீடு மசோதா உள்ளிட்ட பட்ஜட் தொடர்பான மசோதாக்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றது.

மக்களவையிலும் பெற்றோல் மற்றும் டீசல் விலையை குறைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. கேள்வி நேரத்துக்கு பின்னர், எரிபொருள் விலை உயர்வு குறித்து பேசலாம் என சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சிகள், அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்தன. பெற்றோல், டீசல் விலையை உடனே குறைக்க வேண்டும் என திமுக எம்.பி. டி ஆர் பாலு வலியுறுத்தினார்.

பின்னர் குற்றவியல் நடைமுறை மசோதா, மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டபோது, எதிர்க்கட்சிகள் அதற்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. எதிர்ப்பு தீர்மானங்கள் மீது முழு வாக்கெடுப்பு வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியமையால், சபாநாயகர் ஓம் பிர்லா வாக்கெடுப்புக்கு உத்தரவிட்டார். வாக்கெடுப்பில் எதிர்கட்சிகளின் தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்ட நிலையில், குற்றவியல் நடைமுறை மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.



# ஒலுவில் மீள் குடியேற்றக் கிராமத்துக்கு வசதிகள் செய்யக் கோரி கவனவீர்ப்பு!

ஒலுவில் துறைமுக மீள் குடியேற்ற வீட்டுத் திட்டத்திலுள்ள துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியை மீள் குடியேற்ற கிராமத்தின் பொதுத் தேவைக்கு வழங்குமாறு கோரி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 16 வருடங்களாக இவ் வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு சகல வசதிகளும் செய்து தரப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டும் அவை நிறைவேற்றப்படவில்லையென அம்மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இங்குபொதுத்தேவைக்காகஒதுக்கப்பட்டுள்ள காணியை துறைமுக அதிகார சபையினால் தனியாருக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், இக் காணியை பொதுத் தேவைகளுக்காக வழங்குமாறு வலியுறுத்தியும் இவ் வீட்டுத் திட்டத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரியே, கவனவீர்ப்புப்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

# பவுஸர் - ஓட்டோ மோதி விபத்து சிறுமி உட்பட 4பேர் பலத்த காயம்

## நிந்தவூரில் நேற்றிரவு சம்பவம்




நூருல் ஹுதா உமர்

அம்பாறை, நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நிந்தவூர் பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை இரவு 10.20 மணி அளவில் எரிபொருள் பவுஸர் ஒன்றுடன் ஓட்டோ ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் சிறுமி உட்பட நால்வர் பலத்த காயமடைந்தனர்.

அக்கரைப்பற்றில் இருந்து சம்மாந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோவுடன் கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று நோக்கிசென்று கொண்டிருந்த சாய்ந்தமருது பெற்றோல் முகவர் நிலைய அதிபர் ஒருவருக்கு சொந்தமான எரிபொருள் பவுஸர் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலையே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் ஓட்டோ பலத்த சேதத்திற்கு உள்ளானது. அதில் பயணித்த சிறுமி உட்பட நால்வர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் முன்னேற்றம்!

2021ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி, மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில், இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அகில இலங்கை ரீதியான தரம் ஐந்து 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி, மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையிலுள்ள 100 கல்விவலயங்களுள் மட்டக்களப்பு கல்வி வலயம் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து 2,050 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களுள் 449 பிள்ளைகள் வெட்டுப் புள்ளிக்குமேல் சித்தியைப் பெற்றிருக்கின்றார்கள்.

2020ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 433 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற்று, அகில இலங்கை ரீதியில் எமது வலயம் ஐந்தாம் இடத்தில் இருந்தது.

அதேபோல் சித்தி பெறுதல் என்ற அடிப்படையில் எமது கல்வி வலயம் தற்போது இலங்கையில் 26ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. 2020ஆம் ஆண்டு 57ஆம் இடத்தில் இருந்தோம். இது மிகவும் முன்னேற்றகரமாக இருக்கிறது என்றார்.

# பொலிஸ் காவலில் உயிரிழந்த நபரின் சடலத்தை மீள ஒப்படைக்க அவகாசம்




மட்டக்களப்பில் பொலிஸ் காவலில்உயிரிழந்தவிதுசனின் வழக்கு விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இளைஞனின் உடலை மீளப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03 ஆம் திகதி இருதயபுரம் கிழக்கு பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்தார் எனத் தெரிவித்து விதுசன் எனும் இளைஞர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அந்த இளைஞன் பொலிஸ் காவலில் உள்ள போது உயிரிழந்திருந்தார்.

இந்த இளைஞன் ஐஸ் போதைப்பொருள் பக்கெட்டை விழுங்கியமையால் அது வயிற்றினுள் வெடித்து உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை இளைஞனின் குடும்பத்தினர் மறுத்திருந்தமையுடன் இளைஞனைப் பொலிஸார் தாக்கியமையாலேயே உயிரிழந்திருந்தார் எனப் பெற்றோர் தெரிவித்திருந்தனர்.

இளைஞனின் மரணம் தொடர்பான வழக்குவிசாரணை நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் இளைஞனின் உடல் பரிசோதனைகள் முடிவுற்று மீண்டும் உடலை பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு மேலும் இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்குமாறு கோரப்பட்டது.

உடலைக் கொண்டு வருவதற்கு வாகனத்திற்கான டீசல் தட்டுப்பாடு நிலவுவதால் இரண்டு வாரங்களில் உடலை ஒப்படைப்பதாக பொலிஸார் நீதிமன்றத்தில் கூறினர். அதையடுத்து வழக்கு எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது..

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அந்த இளைஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேதனப் பசளை விநியோகம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மட்டக் குழுக்கூட்டம்




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சேதனப் பசளை விநியோகம் தொடர்பான மாவட்ட மட்ட குழுக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்றது.

சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நஞ்சற்ற உணவு , வளமான தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக அரசினால் முன்னெடுத்துள்ள சேதனப் பசளை உற்பத்தியின் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள சேதன பசளை தொடர்பான கலந்துரையாடலே இன்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 32 ஆயிரம் ஹெக்டேயரில் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக பயிர் செய்கைக்கான சேதனப்பசளை உரத்தை எவ்வாறு விநியோகிக்க முடியும் என்பது தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கான உரத்தினை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரணசிங்க, அமைச்சின் மேலதிக செயலாளர் கம்பன்வில, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த், பசுமை உற்பத்தி செயலணியின் மாவட்ட இணைப்பாளரும் 231 ஆவது பிரிகேட் படைப்பிரிவின் தளபதி திலீப பண்டார,

இராணுவ அதிகாரிகள், மாகாண மற்றும் மாவட்ட விவசாய திணைக்களப் பணிப்பாளர்கள், உரக்கூட்டுத்தாபன அதிகாரிகள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# மக்கள், சாரதிகள் நுவரெலியாவில் போராட்டம்

நுவரெலியா எரிபொருள் நிலையத்திற்கு முன்னாள் பொது மக்களும், சாரதிகளும் போராட்டத்தில் ஈடுப்பட்டமையால் அப்பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) பரபரப்பு ஏற்பட்டது.

வாகனத்துக்குத்தேவையான எரிபொருள் பெறுவதற்கு சாரதிகளும், மண்ணெண்ணெய்பெறுவதற்கு பொது மக்களும் நேற்று காலை முதல் எரிபொருள் நிலையத்தை சூழ காத்திருந்தனர்.

எனினும், எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே வாகன சாரதிகளும், மக்களும் எரிபொருள் நிலையத்துக்கு முன்னால் உள்ள சுற்றுவட்டத்தை மறைத்து சுமார் ஒரு மணித்தியாலம் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன்படி, எரிபொருள் வாங்குவதற்காக கொள்கலன்கள் எடுத்து வந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும், வாகனங்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் டீசல் வழங்கப்பட்டது. அதேபோல பொது மக் களுக்கு மாலை 6 மணிக்கு பிறகு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு வவுனியாவில் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்



கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை வன வளத்திணைக்களத்தினர் வேலி போட்டு அடைக்கின்றனர் என தெரிவித்து வவுனியா மதுராநகர் மற்றும் இத்திக்குளம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா மதுராநகர் கிராமத்தின் பின்புறமாக உள்ள வனவளத்திணைக்களத்தினருக்கு உரிய காணியில் குறித்த பகுதியில் 6 கிராமங்களைச் சேர்ந்த மக்களின் கால்நடைகள் மேய்ச்சலுக்காக சென்று வரும் நிலையில் கடந்த சில நாள்களாக வனவளத்திணைக்களத்தினர் அந்தப் பகுதிக்குள் கால்நடைகள் வருவதைத் தடை செய்யும் வகையில் வேலி அமைத்து கால்நடை வளர்ப்பாளர்களையும் அச்சுறுத்தி வந்துள்ளனர். இதன் காரணமாகத் தமது கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதிக்குள் காணப்படும்குளத்தின்நீரேந்துபிரதேசத்திலேயே கால்நடைகள் நீரை பருகுவதால் தற்போது அதுவும் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கிராம மக்கள் தமது கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தை வேலி போட்டு அடைப்பதை வனவளத்திணைக்களத்தினர் நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இத்திக்குளம் காட்டு அம்மன் ஆலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுமார் 6 கிராமங்களைச் சேர்ந்த 2,000 கால்நடைகளின் மேய்ச்சல் தரை இல்லாமல் போவதாகவும் தாம் கால்நடை வளர்ப்பை கைவிட்டு கிராமத்தை விட்டு இடம்பெயர வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த நிலையில் ஊர்வலமாக சுமார் 3 கிலோ மீற்றர் சென்று மதுராநகர் கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கடதாசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு மத்தியவங்கி தலையீட்டுடன் நடவடிக்கை!

இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டுடன் கடதாசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் எஸ்.டி.திசாநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கடதாசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மின்சாரம், எரிவாயு, பொருள்கள் மீண்டும் விலை எகிறமாட்டாதாம்!

## நிதி அமைச்சர் பஸில் உத்தரவாதம்



தற்போதைய நிலையில் மின் கட்டணம், எரிவாயு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இதனை அறிவித்துள்ளார். மின் கட்டணம், எரிவாயு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன என முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மீண்டும் 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு ஏற்பாடு!

குறைந்தவருமானம்பெறும்குடும்பங்களுக்கு விசேட கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று(திங்கட்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரு மாதங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அடையாளம் காணப்பட்ட, குறைந்த வருமானங்களை பெறும் 31 லட்சம் குடும்பங்களுக்கு இந்த கொடுப்பனவானது வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரச கணக்கு தொடர்பான நாடாளுமன்ற குழு மத்திய வங்கி ஆளுநர் கப்ராலுக்கும் அழைப்பு



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அரச கணக்குகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி அவர் குறித்த குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஆராய்வதற்காக மத்திய வங்கியின் ஆளுநர், நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அரச கணக்குகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும், அவர் வருகை தர முடியாது என இறுதி நேரத்தில் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# அரிசிக் கொள்வனவுக்கு வரிசையில் காத்திருக்கும் அபாயம் வரலாமாம்!

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி ஒரு கிலோ கிராம் 300 ரூபாவாக அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் அரிசி கொள்வனவுக்காக வரிசையில் காத்திருக்கும் அபாயம் காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடதாசித் தட்டுப்பாட்டால் ரயில் பயண சீட்டுக்களை டிஜிற்றல் மயமாக்க முடிவு

நாட்டில் நிலவும் கடதாசித் தட்டுப்பாட்டை கவனத்தில் கொண்டு ரயில் பயண சீட்டுக்களை டிஜிற்றல் மயப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல்முறைமைக்குமாற்றுவது தொடர்பில் முறைமையொன்று திட்டமிடப்பட்டுவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரயில் பயண சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசி பற்றாக்குறை காரணமாக கடதாசியைப் பயன்படுத்தும் முறைமையை இல்லாதொழித்து டிஜிற்றல் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பேரீச்சம்பழ இறக்குமதி வரி குறைக்கப்பட்டது



முஸ்லிம்களின் நோன்பு காலத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ இறக்குமதிக்கான 200 ரூபா விசேட தீர்வை வரி, 199 ரூபாவால் குறைக்கப்பட்டு ஒரு ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2022இல் வெளியிடப்பெற்றது.